DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/2022 Crime No. 120/2022 Station: BHAVANI

| | | | |
|---|---|---|---|
| Name | PW4-திரு. ராமசாமி | Caste | |
| Father Name | கே.சுப்ரமணியம் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 45 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 17.07.2023 |

**எதிரி சந்திரா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் பவானி தேவபுரத்தில் குடியிருந்து கொண்டு, வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2022 ம் தேதி மதியம் 03.00 மணி சுமாருக்கு நான் பவானி 4 வது கூடுதல்மாவட்ட நீதிமன்ற அலுவலக அறையில் திருப்பப்பட்ட மனுக்களை பெறுவதற்காக சென்றிருந்தபோது, பவானி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தர் அறையில் சத்தம் கேட்டது. அப்போது நானும், அங்குஅருகிலிருந்த வழக்கறிஞர்கள் திரு.எஸ்.ஆர்.விஜயகுமார், திரு.என்.கோவிந்தசாமி ஆகியோர்களும் அங்கிருந்த மற்ற நபர்களும் தலைமை எழுத்தர் அறைக்கு சென்றோம். அப்போது முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற பெஞ்ச் கிளார்க் திரு.ஆனந்தபட்டு என்பவரும், திருமதி.கலைச்செல்வி என்பவரும் அங்கு வந்தார்கள். அப்போது தலைமை எழுத்தர் திருமதி.சாந்தி என்பவரிடம் திருப்பப்பட்ட மனுக்களை எவ்வாறு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்று கேட்டு பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஆஜர் எதிரி திருமதி. சந்திரா என்பவர் தலைமை எழுத்தரிடம் சத்தம் போட்டு ஒருமையில் பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் திருப்பப்பட்ட மனுக்கள் உடனடியாக தேவை என்று கேட்டார்.

2) அதனால் தலைமை எழுத்தர் அங்கு பணியிலிருந்த நீதிமன்ற அலுவலர் திரு.ஆடலரசன் அவர்களிடம் பீரோவில் உள்ள திருப்பப்பட்ட மனுக்களை எடுத்து கொடுக்குமாறு கூறினார். அதனை பெற்றுகொண்ட திருமதி.சந்திரா அவர்கள் அந்த மனுக்களை எந்த விதிமுறையின்கீழ் தாக்கல் செய்வது என்பதை நீங்கள்தான் சொல்லவேண்டும் என்று அலுவலக ஊழியரை மிரட்டும் தோணியில் கேட்டார். அதற்கு தலைமை எழுத்தர் அவரிடம் எதுக்கு சத்தம் போடுகிறீர்கள், நீதிமன்ற அலுவலகத்தில் இவ்வாறு தரகுறைவாக நடந்துகொள்ளவேண்டாம் எனவும், நீதிமன்ற பணிக்கு இடையூறு செய்யவேண்டாம் எனவும் கேட்டார். அதற்கு திருமதி.சந்திரா அவர்கள் நான் உன்னிடம் பேசவில்லை, நீ வாயை மூடிக்கொண்டு சும்மா இரு என்று ஒருமையில் திட்டினார். அதனால் அருகிலிருந்த நானும், மற்ற வழக்கறிஞர்களும் நீதிமன்ற பணிநேரத்தில் இவ்வாறு இடையூறு செய்யவேண்டாம் என்றும், திருப்பப்பட்ட மனுக்களை முறைப்படி நீதிமன்றத்தில் சமர்ப்பித்து தீர்வு பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினேன்.

3) அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது இவர்களுக்குள் எந்த வழக்கின் அடிப்படையில், என்ன தகராறு என்று தலைமை எழுத்தரிடம் கேட்டபோது, ஒரு குழந்தைவேல் என்பவர் பாட்டப்பன் என்பவர் மீது பவானி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.147/2013 வழக்கை தாக்கல் செய்து, அந்த வழக்கில் கடந்த 30.04.2014 ம் தேதியில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றும், அது சம்மந்தமாக, வழக்கில் தரப்பினர் அல்லாத திருமதி.சந்திரா அவர்கள் பல வருடங்களாக ஒவ்வொரு மனுவாக பல மனுக்களை தாக்கல் செய்து வருகிறார் என்றும், அந்த மனுக்கள் குறைபாடுகளின் காரணமாக திருப்பப்பட்டபோது, அலுவலக ஊழியரிடம் இதே மாதிரி சத்தம் போட்டு தகராறு செய்து மிரட்டி வருகிறார் என்றும், கடந்த 21.03.2022 ம் தேதி திருப்பப்பட்ட மனுக்களை கேட்டு நீதிமன்ற ஊழியர் திரு.ஆனந்தபட்டு அவரிடம் கேட்டு என்ன காரணத்தினால் மனு திருப்பப்பட்டது, இதையெல்லாம் நீதிபதி கவனிக்காமல் கையெழுத்து செய்வாரா என்றும் கேட்டதற்கு அவர் பெஞ்ச் கிளார்க் கலைச்செல்வி திறந்த நீதிமன்றத்தில் பணியிலிருப்பதாகவும், அவரிடம் விளக்கம் கேட்டு தெரிந்து கொள்ளுமாறு கூறி அனுப்பிவிட்டார் என்றும், அவர் அலுவலக அறையிலிருந்து வெளியே வரும்போது, தலைமை எழுத்தர் அறையிலிருந்து வெளியே வந்த தலைமை எழுத்தர் திருமதி.சாந்தி அவர்களை பார்த்து எப்படி போறா பாரு, இவளையெல்லாம் கடவுள் சும்மா விடமாட்டாரு என்றும், திருட்டு முண்டை வெளியே வா உன்ன பார்த்துக்குறேன் என்றும் கூறிவிட்டு போய்விட்டதாகவும், அதனால் நீதிமன்ற பணியிலிருந்த என்னை பலர் முன்னிலையில் திட்டியதால் எனக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது என்றும், நீதிமன்ற பணியினை தொடர்ந்து செய்ய விடாமல் தகராறு செய்து வருகிறார் என்றும் என்னிடம் கூறினார்.

4) இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற அன்று தலைமை எழுத்தர் அறையில் திருமதி.சந்திரா அவர்கள் போட்ட சத்தத்தை கேட்டு தகவல் தெரிந்து நீதிமன்ற தனி அறையிலிருந்த நீதிபதி அவர்கள் என்ன தகராறு என்று விசாரிப்பதற்காக, நீதிமன்ற அறையிலிருந்து தலைமை எழுத்தர் அறைக்கு வருவதற்கு மாடிப்படி வழியாக மேலே வரும்போது, திருமதி.சந்திரா அவர்கள் நீதிபதியிடம் சத்தம் போட்டு தகராறு செய்ததால், அப்போது நீதிமன்ற பணியிலிருந்த பவானி காவல்நிலைய உதவி ஆய்வாளர் மற்ற காவலர்கள் அங்கு வந்து நீங்கள் யார், எதற்காக தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அதைகேட்க நீங்கள் யார் என்று சத்தம் போட்டு கொண்டிருந்தார், அவரை சமாதானப்படுத்தி அங்கிருந்து போலீசார் அனுப்பிவிட்டார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக, பவானி காவல்துறை உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு இந்த வழக்கிலிருந்து நீதிமன்றத்தில் இருந்து நகல் கொடுக்கப்பட்ட பிறகு இந்த வழக்கில் நானும் ஒரு சாட்சியாக இருப்பதை தெரிந்து கொண்டு, என்மீது ஈரோடு தலைமை குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்தில் என்னை 12வது நபராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பதாக மூன்றாம் நபர் மூலம் எனக்கு அம்மனுவின் நகல் கொடுத்து அனுப்பினார்.

**எதிரி தரப்பில் எதிரியால் குறுக்கு விசாரணை-**

1) என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார், அவர் பெயர் என்ன என்று எனக்கு நியாபகமில்லை. பெண் உதவி ஆய்வாளர் விசாரித்தார். 25.03.2022 அன்று விசாரித்தார். தலைமை எழுத்தர் திருமதி.சாந்தி அமர்ந்திருக்கும் அறையில் CCTV கேமரா உள்ளதென்றால் சரிதான்,

ஆனால் அது நடைமுறையில் உள்ளதா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் CCTV பதிவு காட்சிகளை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். திருப்பப்பட்ட மனுக்களை எங்கிருந்து கொடுப்பார்கள் என்றால் நீதிமன்ற அலுவலகத்தில் உள்ள அலமாரியில் திருப்பப்பட்ட மனுக்களை வைத்திருப்பார்கள், அதை எடுத்து தருவார்கள். OS.No.147/2013 என்கிற வழக்கை குழந்தைவேலு என்பவருக்காக எந்த வழக்கறிஞர் தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் திரு.என்.கோடீஸ்வரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் பவானி வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர் என்கிற வகையில் தெரியும்.

2) எதிரி வழக்கிற்கு சம்மந்தமில்லாத மனுக்களை தொடர்ந்து தாக்கல் செய்வார் என்று தலைமை எழுத்தர் திருமதி.சாந்தி தெரிவித்த நிலையில் அந்த மனுக்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல கடந்த 15.07.2023 அன்று சம்மன் வந்தது. இந்த வழக்கு எதிரி மீது பதிவு செய்யப்பட்ட விவரம் எவ்வாறு தெரியும் என்றால் எதிரி நீதிமன்றத்தில் தகராறு செய்த அடுத்த நாள் வழக்கு குறித்து போலீசார் என்னிடம் விசாரிக்கும்போது எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்து தெரிந்து கொண்டேன். நான் வழக்கறிஞர் என்கிற முறையில் எதிரி இதற்கு முன்பு ஏதாவது வழக்கு சம்மந்தமாக என்னை தொடர்பு கொண்டுள்ளாரா என்றால் ஒருமுறை தொலைபேசி மூலம் என்னை தொடர்பு கொண்டு ஈரோடு மாவட்ட தலைமை நீதிபதி மீது வழக்கு தாக்கல் செய்யவேண்டும், அதை தானே தயார்செய்து கொள்கிறேன், அதில் நீங்கள் வழக்கறிஞர் என்னும் இடத்தில் கையொப்பம் இட முடியுமா என்று கேட்டதால் அவ்வாறு நான் கையொப்பம் இடமுடியாது என்று கூறி மறுத்துவிட்டேன்.

3) 24.03.2022 அன்று எதிரி நீதிமன்றத்திற்கு வந்த நேரமே மாலை 04.20 க்கு மேல்தான் என்றாலும், நான் சொன்னதுபோல மதியம் 03.00 மணி சுமாருக்கு நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**